பக்கங்கள் 17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 23 வியாழக்கிழமை 08.08.2024 | அதிர்வு 006

## இதுவரை 22 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர்!

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக நேற்று 4 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சோஷலிச சமத்துவக் 05▶



# திடீரென நாமல் களமிறங்கினாலும் ரணிலுக்கே பெருகி வரும் ஆதரவு!

### பெரும்பாலான மொட்டு எம்.பிக்கள் அவர் பக்கம்

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜ பக்ஷவின் பெயர் நேற்று உத்தியோகபூர்வாக அறிவிக்கப்பட்டாலும் அந்தக் கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்கி வருகின்றனர் என்று அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 05▶

## விடுதலையான அர்ச்சுனாவுக்கு மன்னாரில் அமோக வரவேற்பு!



மன்னார் நீதிமன்றத்தால் நேற்று நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு மன்னார் மாவட்ட மக்கள் அமோக வரவேற்பை வழங்கினர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன்னார் மாவட்ட 06▶




கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் 'குழப்பாடிக்கார' அமைச்சராக விளங்கிய இளவயது அரசியல்வாதிகளில் ஒருவர் லொஹான் ரத்வத்தை.

சந்திரிகா காலத்தில் பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் மகன் இவர்.

அண்மையில் கூட மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டில் நாமல் ராஜபக்ஷவுடன் முரண்பட்டு அடாவடித்தனம் பண்ணினார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகிப் பரபரப்பு ஏற்படுத்தியவர்.

கோட்டாவின் காலத்தில் சிறைத்துறை மற்றும் சிறை மறுசீரமைப்பு ராஜாங்க அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்தை, 2021 செப்டம்பரில் அநுராதபுரம் சிறைக்குள் இருள் கவியும் நேரம் போதையில் தடாலடியாக நுழைந்து, அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளை சிறைக்குள் பொது இடத்தில் கூட்டி, முட்டுக்காலில் நிறுத்தி, அவர்கள் 05▶

# வெள்ளவத்தை ஸ்ரீமயூரபதி ஆடிப்பூரப் பால்குடப் பவனி





வெள்ளவத்தை ஸ்ரீமயூரபதி தேவஸ்தான ஆடிப்பூர பால்குட பவனி நேற்றுக் காலை சிறப்பாக நடைபெற்றது. பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக மயூரபதி அம்பாள் ஆலயத்தை நோக்கி பால் குடம் ஏந்திய பத்தர்கள் புறப்பட்டுச் செல்வதை காணலாம்.











# அரச ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும்

## சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவிப்பு



"இதுவரை மேலைத்தேய வைத்தியர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டு வந்த மேலதிக சேவைக் கொடுப்பனவை, அரச ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது."

– இவ்வாறு சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தற்போது சர்வதேச மட்டத்தில் பல்வேறு மோதல் சூழ்நிலைகளுக்கு மத்தியில் எமது நாட்டில் பொருளாதார ஸ்திரமின்மை ஏற்பட்டு வருகின்றது. இதன்போது, நிலையான பொருளாதார அமைப்பை உருவாக்குவதன் மூலமே நிலையான நாட்டை உருவாக்க முடியும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். தேசியப் பாதுகாப்பை உருவாக்க, நாடு மற்றும் பொருளாதாரம் நிலையானதாக இருக்க வேண்டும்.

எனவே, மக்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து ஒரு நாடாக வெற்றி பெறுவதற்கான தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேலைத்தேய வைத்தியர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டு வந்த மேலதிக சேவை கொடுப்பனவை, அரச ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 18 ஆண்டுகளுக்கும் மேலாக, ஆயுர்வேத மருத்துவர்கள் பல சந்தர்ப்பங்களில் இந்தக் கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர். எனவே, அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அனுமதி அளித்தமைமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

இந்தக் கொடுப்பனவு நிதி அமைச்சுக்கு சுமையாக இருக்காமல் இருப்பதற்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் வழங்கப்படும். இது அரசாங்கத்தின் ஆயுர்வேத வைத்தியர்களுக்குக் கிடைத்த வெற்றி எனக் குறிப்பிடலாம்.

மேலும் கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் பாரம்பரிய வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பான 712 விண்ணப்பங்கள் இதுவரை பெறப்பட்டுள்ளன. இதனிடையே பாரம்பரிய வைத்தியர்களின் பதிவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பல்வேறு வதந்திகள் பரவி வருகின்றன. ஆனால், அடுத்த சில வாரங்களில் இவர்களுக்கான பரீட்சை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளன."– என்றார்.

# வடமராட்சியில் பிரதேச சபையின் அனுமதியின்றி முறைகேடாகக் கட்டப்பட்ட மதில்கள் இடித்தழிப்பு!







(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி பகுதியில் பிரதேச சபையின் அனுமதியின்றி முறைகேடாகக் கட்டப்பட்டு வந்த மதில்கள் நேற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் பிரசன்னத்துடன் ஜேசிபி இயந்திரம் மூலம் இடித்து அகற்றப்பட்டன.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை (கரவெட்டி பிரதேச சபை) எல்லைக்கு உட்பட்ட நெல்லியடி நகரம், கரணவாய் வடக்கு ஆகிய பிரதேசங்களில் இருவேறு காணி உரிமையாளர்களால் பிரதேச சபையின் உரிய அனுமதியின்றி தொடர்ந்தும் கட்டப்பட்டு வந்த மதில்களே இடித்து அகற்றப்பட்டுள்ளன.

கரணவாய் வடக்கு, நவிண்டில் பிரதேசத்தில் உள்ள மதிலும், நெல்லியடி நகர பஸ் தரிப்பிடத்தின் பின்னால் உள்ள வீடொன்றின் மதிலுமே இவ்வாறு இடித்து அகற்றப்பட்டன.

சமீப காலமாக அனுமதி பெறாமல் கட்டடங்கள், மதில்கள் கட்டப்பட்டு வருகின்றமை அதிகரித்துள்ளது எனவும், இதனால் இவற்றைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் பிரதேச சபையிடம் மக்கள் முறையிட்டு வந்தனர்.

இது தொடர்பில் பிரதேச சபையினரால் கடந்த ஒரு வருடமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு நேரடியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு பல்வேறு கடிதங்களும் வழங்கப்பட்டு வந்த நிலையிலும் அவற்றை மீறித் தொடர்ந்து முறைகேடான விதத்திலும் மக்களின் பாதுகாப்பான போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும் பொது வீதிகளை ஆக்கிரமிக்கும் வண்ணமும் குறித்த மதில்கள் கட்டப்பட்ட காரணத்தால் இவை இடித்து அகற்றப்பட்டன என்று பிரதேச சபைத் தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆன்மீக அருளுரை




வரலாற்று சிறப்பு மிக்க வடமராட்சி தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆலயப் பெருந் திருவிழாவை முன்னிட்டு 4 ஆம் திருவிழாவான நேற்று சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் பெருந்திருவிழாக்கால நாளாந்த நிகழ்வாக 'வினை தீர்ப்பான் வேலன்' என்ற ஆன்மீக தலைப்பில் அருளுரையை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினரும், ஆசிரியரும், சைவப்புலவருமான தக.கைலநாதன் நிகழ்த்தினார்.

நேற்றொ புதன்கிழமை காலை 10.45 மணி தொடக்கம் 11.45 மணி வரை இடம்பெற்ற இந்நிகழ்வில் கணிசமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இன்று தொடக்கம் சுற்றுவீதிகளில் போக்குவரத்துத் தடை அமுலுக்கு!



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ பெருவிழாவை முன்னிட்டு இன்று காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்படவுள்ளது.

இந்த வீதித் தடை செப்டம்பர் 4 ஆம் திகதி மாலை வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ் மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ் நகரை அடைய முடியும். என்பதுடன் இரதோற்சவம் மற்றும் சப்பர திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வீதித்தடைகளை அமைப்பது தொடர்பாக நேற்று துறை சார் அதிகாரிகளால் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ் மாநகர ஆணையாளர் என்.கிருஷ்ணேந்திரன் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், மாநகர சபை அதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலையில் துப்பாக்கி வைத்து, அச்சுறுத்தி, அட்டகாசம் புரிந்தமை பற்றிய செய்திகள் அச்சமயத்தில் பரபரப்பாக வெளியாகி இருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இது தொடர்பாக சிறைத்துறை விசாரணை, தனி விசாரணை குழுவின் விசாரணை எல்லாம் நடந்து முடிந்து விட்டன. உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு நிலுவையில் உள்ளது. அதே சமயம் இந்த விடயம் தொடர்பாக அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் லொஹான் ரத்வத்தையின் மீது கிரிமினல் வழக்கு ஒன்றும் நிலுவையில் உள்ளது.

அந்த வழக்கு இன்று அநுராதபுரம் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட உள்ளது.

சம்பவம் நடைபெற்ற போது அநுராதபுரம் சிறையில் இருந்த அரசியல் கைதிகளில் ஒருவர் சூரியபாலன். அவர் தலையில்தான் பிஸ்டலை வைத்து அவரை கொல்வேன் என்று லொஹான் ரத்வத்தை அச்சுறுத்தினார் எனக் கூறப்படுகிறது. அந்த சூரியபாலன் இப்போது கைதி அல்லர். விடுதலையாகி விட்டார்.

வழக்கில் இன்று அவர் சாட்சியமளிக்க வேண்டும்.

அவரது சாட்சியத்தை சட்டத்தரணி கேசவன் சயந்தன், சட்டத்தரணி வென்ஸ்ஸலர்ஸ் துஷாந்தவின் அனுசரணையுடன் நெறிப்படுத்தவிருக்கின்றார்.

அரசியல் கைதியாக சிறையில் இருந்த போது அவருக்கு இருந்த பாதுகாப்பு இப்போது வெளியில் இருக்கும் அவருக்கு உண்டா என்பது கேள்விக்குறியே.

எனினும் உண்மையை அவர் நீதிமன்றத்தில் கூறத்தான் வேண்டும்.

உண்மையைத் துணிச்சலாக எடுத்துக் கூறிவிட்டு, உயிர் வாழ்க்கையை அச்சுறுத்தலோடுதான் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

பார்ப்போம் அவர் துணிச்சலை...!

## இதுவரை 22 வேட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

கட்சியின் வேட்பாளரான பாணி சிறிவர்தன நேற்று கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார். அத்துடன், மேலும் 3 சுயேச்சை வேட்பாளர்களும் நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதன்படி, இதுவரையில் மொத்தமாக 22 ஜனாதிபதி வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அதற்காகக் கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் எதிர்வரும் 14ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

## திடீரென நாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உட்பட 9 கட்சிகளைச் சேர்ந்த 102 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரையில் உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை வெளிப்படையாக அறிவித்துள்ளனர். இந்த 102 பேரில் 70 பேர் பொதுஜன பெரமுனவைச் சார்ந்தவர்கள் ஆவர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கின்றனர். ஒருவர் மாத்திரம் நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளதுடன், இருவர் சர்வஜன கட்சியின் உள்ளனர். அத்துடன் விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுஜன பெரமுன சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் தெரிவானார்கள். இதில் 9 பேர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கின்றனர். இருவர் நாமல் ராஜபக்ஷவுடன் இருப்பதுடன், மற்றுமொருவர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே இது வரையில் தனது நிலைப்பாட்டை தெரிவிக்க வில்லை.

களுத்துறை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், பொதுஜன பெரமுன சார்பில் 8 பேர் கடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்கள். இதில் 5 பேர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை அறிவித்துள்ளனர். தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர சர்வஜன சக்தியில் இணைந்துள்ளார். மேலும், பொதுஜன பெரமுனவில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான தொடர்ந்தும் நாமல் ராஜபக்ஷவுடன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்.

பொதுஜன பெரமுன சார்பில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் தெரிவான 8 நாடாளுமன்ற உறுப்பினர்களில், ஒருவரை தவிர ஏனைய அனைவரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர். மாத்தளை மாவட்டத்தில் தெரிவான 4 நாடாளுமன்ற உறுப்பினர்களுமே ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவையே வெளிப்படுத்தியுள்ளனர். மறுபுறம் நுவரெலியா மாவட்டத்தில் தெரிவான 5 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணிலுக்கே ஆதரவை வெளிப்படுத்துகின்றனர்.

காலி மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுஜன பெரமுன சார்பில் தெரிவானார்கள். இதில் 3 உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவளிப்பதுடன், ஷான் விஜேலால் டி சில்வா மற்றும் சந்திம வீரக்கொடி ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளனர். இசுரு தொடங்கொட பொதுஜன பெரமுனவில் தொடர்ந்தும் செயல்படுகின்றார். ஆரம்பத்தில் ரணிலுக்கு அதரவளித்த மொஹான் டி சில்வா மீண்டும் பொதுஜன பெரமுனவில் இணைந்து காலி மாவட்டத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். மறுபுறம், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவம் செய்த மனுஷ நாணயக்கார, ரணிலுக்கு ஆதரவளிக்கின்றார்.

மாத்தறை மாவட்டத்தில் பொதுஜன பெரமுன சார்பில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள். மஹிந்த யாப்பா அபேவர்தன சபாநாயகராக உள்ளார். டலஸ் அழகப்பெரும மற்றும் கருணாதாச கொடிதுவக்கு ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளனர். வீரசுமன வீரசிங்க சர்வஜன சக்தியில் இணைந்துள்ளார். காஞ்சன விஜேசேகர ரணிலுக்கு ஆதரவளிக்கின்றார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மொட்டுக் கட்சி சார்பில் தெரிவானார்கள். இதில் மஹிந்த அமரவீர மற்றும் அஜித் ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கின்றனர். அந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற நாமல் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ மற்றும் டி.வி. சானக ஆகியோர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளருக்கு ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். எஞ்சியிருந்த உபுல் கலப்பத்தி ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டக்ளஸ் தேவானந்தா, வன்னி மாவட்டத்தின் காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன் ஆகியோர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் ஆகியோரும் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கின்றனர்.

மொட்டுக் கட்சி சார்பில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 3 ஆகும். இதில் விமலவீர திஸாநாயக்க, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கின்ற நிலையில், திலக் ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார். டீ. வீரசிங்க நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கின்றார். இதனைத் தவிர தேசிய காங்கிரஸின் ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோர் ரணிலுக்கு ஆதரவளிக்கின்றனர்.

குருநாகல் மாவட்டத்தில் மொட்டுக் கட்சி சார்பில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள். இதில் ஐவர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கின்றனர். தயாசிறி ஜயசேகர மற்றும் வை.ஜி. ரத்னசேகர ஆகியோர் மொட்டுக் கட்சியிலிருந்து வெளியேறி ஏனைய கட்சிகளில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் தலைவராக உள்ளார். அநுர பிரியதர்ஷன யாப்பா லன்சா குழுவில் இணைந்துள்ளார். இந்தக் குழு ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவளிக்கின்றது.

புத்தளம் மாவட்டத்தில் மொட்டுக் கட்சி சார்பில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள். இதில் 4 பேர் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவளிக்கின்றனர்.

அனுராதபுரம் மாவட்டத்தில் பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்குத் தெரிவான 7 பேரில் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியூடாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இஷாக் ரஹ்மானும் காலியில் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்டார்.

பொதுஜன பெரமுனவின் பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் நால்வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கின்றனர்.

பதுளையில் 6 பொதுஜன பெரமுன எம்.பி.க்கள் உள்ளனர். அவர்களில் மூவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பதுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் 3 எம்.பி.க்களும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத்

06▶

# தமிழ்ப் பொது வேட்பாளராக அரியத்தைக் களமிறக்க முடிவு?

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்ப் பொது வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்க பா. அரியநேத்திரனை நியமிப்பதற்குப் பேச்சாளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது எனவும், இதன் இறுதி முடிவு இன்று அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளும், சிவில் சமூகமும் இணைந்து உருவாக்கிய தமிழர் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான பேச்சுகள் கடந்த சில நாட்களாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதன் தொடராக ஜனாதிபதி வேட்பாளராக ஒருவரைத் தேர்வு செய்வதில் இழுபறிகள் இருந்து வந்த நிலையில் தற்போது ஒருவர் தெரிவு செய்யப்பட்டு இன்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளார்.

அதாவது தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரத்தில் பல கட்சிகள் இணங்கியிருந்தாலும் குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது முடிவை அறிவிக்காத நிலையில் அதே கட்சியைச் சேர்ந்த அரியநேத்திரன் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.



# பாரிய போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த பெண்ணொருவர் 57 கோடி ரூபாவுடன் சிக்கினார்!

பாரியளவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு எட்டு அரச மற்றும் தனியார் வங்கிக் கணக்குகளைப் பராமரித்து, அந்தக் கணக்குகளின் ஊடாக 57 கோடி ரூபாவைப் புழக்கத்தில் வைத்திருந்த பெண் ஒருவரைக் கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கண்டி, பைரவ கந்தவில் உள்ள பொலிஸ் பரிசோதகரின் இல்லத்தில் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றிய ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதையடுத்து, போதைப்பொருளைப் பெறுவதற்காகப் பணம் செலுத்தப்பட்ட கணக்கு இலக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையின்போது மேற்படி பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.



## திடீரென நாமல்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலில் மொனராகலை மாவட்டத்துக்குத் பொதுஜன பெரமுனவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 ஆகும். அவர்களில் 4 பேரின் ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் பொதுஜன பெரமுனவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 8 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர். இரத்தினபுரி மாவட்ட தலைவர் பவித்ரா வன்னியாராச்சி இரட்டை நிலைப்பாட்டில் இருக்கின்றார். வாசுதேவ நாணயக்கார சுகவீனம் காரணமாக அரசியலில் ஈடுபடுவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் பதவியைக் கோரியுள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் கேகாலை மாவட்டத்தில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அந்த மாவட்டத்தில் ஜனாதிபதி ரணிலுக்கு 6 எம்.பி.க்களின் ஆதரவு காணப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவின் 17 தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 10 பேர் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உள்ளனர். மேலும் மூவர் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டில் இருந்தாலும் இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொது வைத்தியசாலையினுள் அத்துமீறி நுழைந்து கடமைக்கு இடையூறை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்தியசாலை தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து வைத்தியர் அர்ச்சுனா மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரை மறுநாள் சனிக்கிழமை மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை நேற்று 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இந்தநிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது வைத்தியர் அர்ச்சுனா மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

வைத்தியர் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்டன் புனிதநாயகம் தலைமையிலான சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

மன்னார் நீதிவான் நிபந்தனையின் அடிப்படையில் தலா 50 ஆயிரம் ரூபா இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

நீதிமன்றிலிருந்து வைத்தியர் வெளியேறியபோது மன்னார் மாவட்ட நீதிமன்றத்துக்கு முன் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி வரவேற்றனர்.

பின்னர் மன்னார் மாவட்ட மக்கள் வைத்தியரை மன்னார் பொது விளையாட்டு மைதானப் பகுதிக்கு அழைத்துச் சென்று மாலை அணிவித்து தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மன்னார் – தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி கடந்த மாதம் 28ஆம் திகதி உயிரிழந்தார்.

மரணமடைந்த இளம் தாய் பட்டப்படிப்பை நிறைவு செய்த மரியராஜ் சிந்துஜா வயது (27) எனத் தெரியவந்தது.

மேற்படி பெண்ணின் மரணத்தின்போது சம்பவ தினம் விடுதியிலிருந்தவர்களின் அசமந்தப்போக்கே காரணம் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்தநிலையிலேயே வைத்தியர் அர்ச்சுனா மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் அங்கு கடமைக்கு இடையூறை ஏற்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

## ஊழல் மோசடியில் சாதனை!

பிணைமுறி விவகார ஊழல் மூலம் பல்லாயிரம் கோடி ரூபா சுத்த முயன்ற அரசு யாருடையது என்பது மக்களுக்கு நன்கு தெரியும். அந்தச் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் சிக்காமல் இன்னும் - இன்றும் - தப்பியுள்ளனர்.

அதுபோன்ற ஊழல் மோசடிகளே நாடு இன்று குட்டிச்சுவராகி இந்த மோச மான பொருளாதார நிலையில் தள்ளாடுவதற்குப் பிரதான காரணம் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

ஊழலை - மோசடியை - ஒழித்துக் கட்டினால் மட்டுமே நாடு பொருளாதார சுபிட்சம் அடைய முடியும் என்பதை நாட்டை இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுப்பதற்கு உதவ முன்வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியம் மிக அடிப்படை விடயமாகச் சுட்டிக் காட்டியது.

அதற்கமைய ஊழல் தடுப்பு நடவடிக்கைகள், சட்டங்கள் கொண்டுவரப் படுகின்றன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரபலாபித்துக் கொள்கின்றார்.

ஆனால் அவரது நல்லாட்சி அரசில் மிக மோசமாக இடம் பெற்ற பிணைமுறி மோசடியிலும் விட பாரதூரமான ஊழல் மோசடி குறித்து இப்போது அதிர்ச்சித் தகவல் வெளியாகி இருக்கின்றது.

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு 'ஈ விஸா' வழங்கும் நடைமுறையை வெளியார் - தனியார் - நிறுவனம் ஒன்றுக்குத் தாரை வார்ப்பதன் மூலம் பல்லாயிரம் கோடி ரூபா சுளையாகச் சூறையாடப்படும் பெரும் நாசவேலை குறித்த விவரங்கள் இப்போது அம்பலமாகி, ரணில் அரசின் ஊழல் மோசடி சந்தி சிரிக்கும் விவகாரமாகி இருக்கின்றது.

இந்த ஊழல் நடவடிக்கையினால் அரசுக்கு ஏற்படவிருந்த நாலாயிரம் கோடி ரூபா இழப்பு நீதிமன்றத்தின் மூலம் தடுக்கப்பட்டு இருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டி இருந்தனர். ஆனால் அந்தப் புள்ளி விவரங்கள் தவறானவை. அடுத்த 16 ஆண்டுகளில் இந்த ஊழல் திட்டத்தினால் ஏற்பட விருந்த நஷ்டம் சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகம் என்பதுதான் உண்மை.

இதுவரை காலமும் ஸ்ரீலங்கா ரெலிகொமின் கீழ் இயங்கும் மொபிடெல் மூலம் ஈ விஸா வழங்கும் திட்டத்திற்கு தலா ஒரு பயணிக்கு ஒரு டொலர் சேவைக் கட்டணமாக அறவிடப்பட்டு வந்தது. திடீரென்று எட்டு மணி நேர அறிவித்தலோடு அந்த நடைமுறை நிறுத்தப்பட்டு, ஊர், பெயர் விவரம் தெரியாத கம்பனி ஒன்றுக்கு எந்தக் கேள்விப்பத்திர நடைமுறைகளும் பின்பற்றப்படாமல் அந்த சேவை வழங்கப்பட்டது. அதற்காக அந்த நிறுவனம் ஒவ்வொரு விசா வழங்கலுக்கும் 25 டொலர் கட்டணம் அறவிட அனுமதிக்கப்பட்டது. அந்த நிறுவனத்துடனான 16 ஆண்டுகள் ஒப்பந்த காலத்தில் அந்த நிறுவனம் இத்திட்டத்தின் மூலம் 275 கோடி டொலர்களை (சுமார் ஒரு லட்சம் கோடி ரூபாவை) தனது சேவை கட்டணமாகச் சுருட்டி கொண்டு செல்லும். அதனால் நாட்டுக்கு - அரசுக்கு - எந்த நன்மையும் இல்லை.


இப்படி நாட்டின் வருமானத்தை வெளியில் பெயரோ, விவரமோ தெரியாத ஒரு கம்பெனி தன்பாட்டில் சுத்திக்கொண்டு செல்ல அதன் பயன் ஏதும் நாட்டுக்கோ, அரசுக்கும் கிடைக்காது என்பது இந்த மோசடியின் அடிப்படை.

இந்த நடைமுறைக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்து விட்டது. பழைய விஸா வழங்கல் முறைக்கு போகும்படி உயர் நீதிமன்றம் பணித்துவிட்டது. ஆனால் அரசு பழைய முறைக்குப் போகாமல் இழுத்தடித்து நிற்கின்றது.

புதிய திட்ட மூலம் கிடைத்த கையூட்டுக்கள் பழைய முறைக்கு திரும்ப அனுமதிப்பதாக இல்லைப் போலும். உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியும் பழைய முறைக்குத் திரும்பாமல் இழுத்தடிக்கும் அதிகாரத் தரப்புக்கள், இனி உயர்நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுக்கு இலக்காகும் ஏதுநிலைகள் உள்ளன.

எது, எப்படி என்றாலும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் ஊழல், மோசடிகள் சாதனைக்கட்டத்தை அடைந்திருக்கின்றன என்பது கண்கூடு.

# மஹாராஷ்டிராவில் 66 பேர் ஜிகா வைரஸ் தொற்றால் பாதிப்பு!



மஹாராஷ்டிராவின் புனே மாவட்டத்தில் கர்ப்பிணிகள் 26 பேர் உட்பட 66 பேர் ஜிகா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது

ஏடிஸ் வகை கொசு வாயிலாகவே, ஜிகா வைரஸ் பரவுகிறதுடன் ஜிகா வைரசால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகளுக்கு மூளை வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் புனேவில், 26 கர்ப்பிணிகள் உட்பட 66 பேர் ஜிகா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இதுவரை 4 பேர் ஜிகா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வயநாடு துயரத்தை மத்திய அரசு பேரிடராக அறிவிக்க வேண்டும்

## ராகுல் காந்தி வலியுறுத்தல்



வயநாடு துயரத்தை தேசிய பேரிடராக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மக்களவையில் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மக்களவையில் பேசிய ராகுல் காந்தி, "சில நாள்களுக்கு முன் நான் எனது சகோதரியுடன் வயநாடு சென்றேன். வயநாடு நிலச்சரிவின் விளைவாக ஏற்பட்ட பேரழிவு, வலி மற்றும் துன்பத்தை நான் என் கண்களால் பார்த்தேன்.

மலையின் ஏறக்குறைய 2 கிலோ மீட்டர் பகுதி சரிந்து, கற்களின் ஆறாகவும், மண் ஆறாகவும் ஓடியது. இதில், 200க்கும் மேற்பட்டோர் உயரிழிந்துள்ளனர். ஏராளமானோரை காணவில்லை. இறுதியில், இறப்பு எண்ணிக்கை 400-ஐ தாண்டலாம்.

மத்திய அரசு, மாநில அரசு, தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை, ராணுவம், கடற்படை, கடலோர காவல்படை, மாவட்ட நிர்வாகம், வனத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் படை, சுகாதார பணியாளர்கள் ஆகியோரின் பணிகளை பாராட்ட விரும்புகிறேன். அதேபோல் அண்டை மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, தெலங்கானா ஆகியவை அளித்த உதவிகளும் பாராட்டுக்குரியவை.

பல்வேறு தரப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியதைப் பார்த்தேன். பல்வேறு விதமான கொள்கைகள் கொண்டவர்கள், பல்வேறு சமூக மக்கள் என ஒவ்வொருவரும் ஒன்றிணைந்து மற்றவர்களுக்கு உதவினார்கள்.

இது மிகப் பெரிய பேரழிவு. மத்திய அரசு ஒருங்கிணைந்த மறுவாழ்வுக்கான நிதி உதவியை வழங்க முன்வர வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். பாதிக்கப்பட்டவர்கள் இடிந்த தங்கள் வீடுகளை கட்டிக்கொள்வது உட்பட அனைத்து விதமான மறுவாழ்வு உதவிகளையும் மத்திய அரசு வழங்க வேண்டும். அதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய அரசு இழப்பீடு வழங்க வேண்டும். இன்னும் குறிப்பாக, வயநாடு துயரத்தை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

பல பேரழிவுகளை நான் பார்த்திருக்கிறேன். பல்வேறு இடங்களில் நிகழ்ந்த பல சம்பவங்களை பார்த்திருக்கிறேன். வயநாடு பேரழிவு மிகவும் மோசமானது. ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே பிழைத்து, அவரது தாய், தந்தை, சகோதரன், சகோதரி என பலரும் உயிரிழந்த நிகழ்வுகள் பல நடந்துள்ளன. சில இடங்களில் அந்த நபர் ஒரு குழந்தையாக அல்லது முதியவராக இருக்கிறார். இது உண்மையான பேரழிவு.

வயநாடுக்கான விரிவான மறுவாழ்வு நிதி உதவியை, பேரிடரை தாங்கும் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான நிதி உதவியை வழங்கி ஆதரவளிக்குமாறு மத்திய அரசை நான் வலியுறுத்துகிறேன்" என தெரிவித்தார்.

# இந்தியர்களுக்கு பயண எச்சரிக்கை



பிரித்தானியாவில் பல பகுதிகளில் நிலவும் கலவரம் காரணமாக இந்தியர்களுக்கு பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரித்தானியாவில் கடந்த சில வாரங்களுக்கு முன் 3 சிறுமிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக அங்கு இஸ்லாமியர்களுக்கும், புலம்பெயர்ந்தவர்களுக்கும் எதிராக மக்கள் போராட்டம் வெடித்திருந்தது

இந்நிலையில், பிரிட்டன் வரும் இந்தியர்கள் மற்றும் அங்கு வசிக்கும் இந்தியர்கள் கவனமாக இருக்கும்படி பிரித்தானியாவிற்கான இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும் வன்முறை தொடர்பாக பிரதமர் கீர் ஸ்டார்மர் அவசர ஆலோசனைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





# உக்ரைன் படையின் ஊடுருவல் தாக்குதலில் ரஷ்ய படையினர் பலர் கொல்லப்பட்டனர்

உக்ரைனிய படையினர் கருங்கடலின் வடக்கு பகுதியில் மேற்கொண்ட ஊடுருவல் தாக்குதலில் ரஷ்ய படையினர் பலர் கொல்லப்பட்டதுடன் அவர்களது இராணுவ உபகரணங்களும் அழிக்கப்பட்டதாக உக்ரைன் பாதுகாப்பு புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்று இரவு இந்த அதிரடி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது ரஷ்ய படையினரின் கவசவாகனங்கள், இலத்திரனியல் போர் உபகரணங்கள் அழிக்கப்பட்டதுடன், ரஷ்ய படைக்கும் பெரும் சேதம் விளைவிக்ககப்பட்டது.

இதேவேளை, உக்ரைன் இராணுவத்தை சேர்ந்த 300 பேர் எல்லை கடந்து ரஷ்யாவிற்குள் நுழைந்து தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படுவதுடன், இவர்கள் 10 கிலோ மீற்றர் வரை ஊடுருவி வந்ததாக ரஷ்ய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

11 டாங்கிகள் 20க்கும் மேற்பட்ட கவசவாகனங்களின் உதவியுடன் இந்த தாக்குதலை உக்ரைனியபடையினர் முன்னெடுத்ததாகவும் ரஷ்ய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கேர்க்ஸ் பிராந்தியத்தின் எல்லை கிராமங்களிலும், முன்னரங்குகளில் இருந்து பத்து கிலோமீற்றர் உள்ளேயும் பல மணிநேரம் இந்த மோதல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.




# ஈராக்கில் உள்ள அமெரிக்க படைத்தளம் மீது தாக்குதல்

## பலர் காயம்

ஈராக்கில் உள்ள அமெரிக்க படைத் தளம் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் 7 பேர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அல்-அசாத் முகாமை இலக்கு வைத்து பல ரொக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் ஐந்து அமெரிக்க சேவை உறுப்பினர்கள் மற்றும் இரண்டு அமெரிக்க ஒப்பந்ததாரர்கள் காயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

இந்த தாக்குதல் தொடர்பாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லொயிட் ஒஸ்டின் கூறுகையில், தனது படை வீரர்களுக்கு எதிரான தாக்குதல்களை அமெரிக்கா பொறுத்துக்கொள்ளாது என்றார்.

ஏவுவதற்கு தயாராக இருந்த 8 ரொக்கெட்டுகளுடன் கூடிய ட்ரக் வண்டியொன்று தமது இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இராணுவ தளத்தை தாக்கிய குற்றவாளிகளை கண்டுபிடிக்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஈராக் அரசாங்கத்தின் பாதுகாப்பு ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.



# நேபாளத்தில் ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானதில் 5 பேர் பலி

நேபாளத்தில் ஹெலிக்கொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்துள்ளார்.

தலைநகர் காத்மண்டுவில் இருந்து புறப்பட்ட மேற்படி உலங்கு ஹெலிக்கொப்டர் நாட்டின் வடமேற்கேயுள்ள மலைப் பாங்கான பகுதியில் நேற்று மதியம் விபத்துக்குள்ளானது.

விமானி உட்பட அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

ஹெலிக்கொப்டரி பயணித்த 4 பேர், சீன நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் மற்றொரு உடல் அடையாளம் காண முடியாதவாறு எரியுண்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.







# வாய்ச் சொல்லால் மாணவியின் மீது துஷ்பிரயோகம் சித்திர பாட ஆசிரியர் கைதாகி விளக்க மறியலில்!

## மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு

(நமது நிருபர்)

மட்டக்களப்பில் மாணவி ஒருவர் தனக்கு சித்திர பாட ஆசிரியர் ஒருவர் வாய்ப் பேச்சு மூலம் பாலியல் துஷ்பிரயோகம் செய்து வருகின்றார் என ஜனாதிபதிக்குச் செய்த முறைப்பாட்டையடுத்து, பொலிஸாரின் விசாரணைக்குச் செல்லாது தலைமறைவாகியிருந்து வந்த அந்த ஆசிரியர் இந்தச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நேற்றுப் புதன்கிழமை சரணடைந்த போது அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினரும் செயற்பாட்டாளரும் என்று கூறப்படுகின்றது.

மட்டக்களப்பில் பெண்கள் பாடசாலை ஒன்றில் உயர்தரத்தில் பயின்று வரும் மாணவி ஒருவருக்கு சித்திர பாடம் கற்பித்துவரும் ஆசிரியர் ஒருவர் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வாய்ப் பேச்சில் – வார்த்தைகள் மூலம் – பாலியல் துஷ்பிரோயம் மேற்கொண்டு வந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக எவருக்கும் முறையிட்டு என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிவித்த அந்த ஆசிரியர், "உயர்தர மாணவி பாலியல் துஷ்பிரயோகம்" என முகநூலில் பதிவிடுவேன் எனவும், தான் ஓர் அரசியல் கட்சி சார்ந்தவர் எனவும், தன்னை எதிர்த்தால் இந்த மாவட்டத்தில் இருக்கமுடியாது எனவும் அந்த மாணவியை அச்சுறுதியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவி அவரது வகுப்பாசிரியர் மற்றும் பெற்றோருக்குத் தெரிவித்து வந்துள்ளார்.

கடந்த மாதம் 11 ஆம் திகதி சம்பந்தப்பட்ட ஆசிரியர் பாடத்திட்டத்தில் இல்லாத படங்களை வரையுமாறும் இல்லாவிட்டால் வகுப்பறையில் இருந்து வெளியேறுமாறும் தெரிவித்தமையால் மாணவி வகுப்பறையில் இருந்து வெளியேறி, அதிபரிடம் சென்றிருக்கின்றார். அவர் இல்லாத நிலையில் வீட்டிற்கு சென்று தனக்கு நடந்த அநீதியைப் பெற்றோருக்குத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பெற்றோர் விடயத்தைப் பாடசாலை பிரதி அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். அவர் பாடசாலை அதிபர் கவனத்திற்கு விவகாரத்தைக் கொண்டு வந்தமையுடன், பெற்றோரிடம் முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றைத் தாருங்கள், தீர்வு பெற்றுத் தருவோம் என உத்தரவாதமளித்திருக்கின்றார்.

இதனையடுத்து மீண்டும் பாடசாலைக்கு மாணவி சென்ற போதும் அந்த ஆசிரியர் மாணவி கல்வி கற்கும் சூழலைக் குழப்பி வந்தார் எனப் பெற்றோர்கள் கூறுகின்றனர்.

இதனையடுத்து அந்த மாணவி தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக ஜனாதிபதிக்கு சிங்கள மொழியில் முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியுள்ளார் எனத் தெரிகிறது.

இது தொடர்பாக உடன் விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு கடந்த 22 ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் பணிப்புரை விடுத்ததையடுத்து பொலிஸார் பாதிக்கப்பட்ட மாணவியிடமும் பாடசாலை அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களிடம் வாக்கு மூலத்தைப் பெற்றனர். விசாரணைக்காகப் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர் அழைக்கப்பட்டபோதும் அவர் பொலிஸ் நிலையம் செல்லாது தலைமறைவாகி இருந்துள்ளார். அவருக்கு எதிராகக் குற்றவியல்சட்டம் 345ஆம் பிரின் கீழ் வழக்குத் தாக்குல் செய்யப்பட்டிருந்தது.

தலைமறைவாகிய ஆசிரியர் நேற்றுப் புதன்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் சிரேஷ்ட சட்டத்தரணி பிரேம்நாத் தலைமையிலான சட்டத்தரணிகள் ஊடாக முன்நகர்வுப் பத்திரம் விண்ணப்பித்து நீதிமன்றில் சரணடைந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு நீதிவான் எடுத்துக் கொண்ட போது பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் சட்டத்தரணி கமலநாதன் ஆஜரானார். மேற்படி ஆசிரியருக்கு பிணை அனுமதி வழங்க வேண்டாம் என அவரும் வழக்குத் தொடர்ந்த மட்டக்களப்பு பொலிஸாரும் நீதிமன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்த நிலையில், நீதிவான் குறித்த ஆசிரியரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இந்த ஆசிரியர் தலைமறைவாகியுள்ளார் எனவும், உரிய நடவடிக்கை எடுக்குமாறும் நாடாளுமன்றத்தில் நேற்று இரா. சாணக்கியன் எம்.பி. தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையானின் கட்சி ஒருங்கிணைப்பாளரால் பாடசாலை மாணவிக்குப் பாலியல் தொந்தரவு!

## ஜனாதிபதி செயலகம் அறிவித்தும் நடவடிக்கை இல்லை நேற்று நாடாளுமன்றில் சாணக்கியன் விசனம் தெரிவிப்பு

இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) கட்சி ஒருங்கிணைப்பாளரான ஆசிரியர் ஒருவர் பாடசாலை மாணவிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இவரைக் கைது செய்து செய்யுமாறு ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியுள்ள நிலையிலும் இதுவரை அவர் கைது செய்யப்படவில்லை. இவ்விடயம் குறித்து கல்வி அமைச்சரின் நிலைப்பாடு என்னவென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா. சாணக்கியன் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை விசேட கூற்றை முன்வைத்தே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இரா. சாணக்கியன் மேலும் கூறுகையில் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான பாடசாலையில் கல்வி பயிலும் மாணவிக்கு அந்த பாடசாலையின் ஆசிரியரான கோபிநாத் என்பவர் பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இந்த மாணவி ஜனாதிபதிக்கு இவ்விடயத்தை அறிவித்துள்ளார். இந்த நபரை உடனடியாக கைது செய்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு கடந்த 12 ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.




இருப்பினும் இந்த ஆசிரியரை பொலிஸார் இன்றுவரைக் கைது செய்ய வில்லை. தனது சட்டத்தரணி ஊடாக அவர் நீதிமன்றில் முன்னிலையாகுவார் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர். பொலிஸாரின் கடமை இதுவல்ல. கோபிநாத் என்ற இந்த ஆசிரியர் தான் இராஜாங்க அமைச்சர் பிள்ளையானின் கட்சி ஒருங்கிணைப்பாளர் என்று பகிரங்கமாகக் கூறுகின்றார்.

இந்த மாணவியிடம் "நான் குறிப்பிடுவதை போல் இருக்காவிடின் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்" என்று இந்த ஆசிரியர் மிரட்டியுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதியிடம் முறையிட்டும் பாடசாலை மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் கைது செய்யப்படவில்லை. இது தேசியப் பாடசாலை. ஆகவே இந்தப் பிரச்சினைக்கு கல்வி அமைச்சரின் பதிலை எதிர்பார்த்துள்ளேன். – என்றார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினரிடம் நான் தகவல்களைக் கேட்டுள்ளேன், கல்வி அமைச்சு ஊடாக தலையிட்டு, உடனடியாக சட்டத்தை செயற்படுத்துமாறு குறித்த சிரேஷ்ட பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்துகிறேன். – என்றார்.



# 7 நாள்களில் 773 பேருக்கு டெங்கு புதிய தொற்றாளர்கள் அடையாளம்

கடந்த 7 நாளகளுக்குள் 773 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவர்களில் 126 பேர் 24 மணித்தியாலங்களுக்குள் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, நாட்டில் இவ்வருடம் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 518 ஆகும். இவர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 பேர் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர்.



# கசிப்புக் காய்ச்சி விற்பனை செய்து வந்த இளைஞர் கொழும்புத்துறையில் கைது!

யாழ்ப்பாணம் – கொழும்புத்துறை பகுதியில் கசிப்பு காய்ச்சி விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் நேற்றொ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொலிஸாரால் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

அதன்போது 227 போத்தல் கோடாவும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் கொழும்புத்துறையிலும் வட்டுக்கோட்டையிலும் வீடுகளை வாடகைக்கு எடுத்து கசிப்பு காய்ச்சி பல இடங்களில் விற்பனையில் ஈடுபட்டாரென பொலிஸார் தெரிவித்தனர்.

# நாணய நிதியக் கடன் சலுகையின் மூன்றாவது மீளாய்வு ஒத்திவைப்பு

இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் சலுகையின் மூன்றாவது மீளாய்வு ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனை முன்னிட்டு அதிகாரிகள் குழுவொன்று நாட்டிற்கு வருகை தர வுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதிய தூதுக் குழுவின் சிரேஷ்ட தலைவர் பீட்டர் புருவர் உள்ளிட்ட குழுவினர் அண்மையில் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் அவர்கள் கலந்துரையாடியமையுடன், இலங்கைக்கான கடன் மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் கடன் சலுகை 3 தவணைகளில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சஜித் - தயாசிறி இடையே உடன்படிக்கை கைச்சாத்து

தயாசிறி ஜயசேகர தலைமையிலான கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேதாஸ மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பத்தரமுல்லையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றதும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தைப் பொறுபேற்று, கட்சியை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று தெரிவித்திருந்தார்.

# பதவிக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை!

## சு.கவுடனான இணக்கம் குறித்து சஜித் தெரிவிப்பு

""எந்தவித பதவிகளையும் எதிர்பார்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியுடன் உடன்படிக்கையைக் கைச்சாத்திடவில்லை."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தற்போது, வேட்பாளர்களுக்கான ஆதரவு குறித்துப் பரவலாகப் பேசப்படுகிறது. இன்று கைச்சாத்திட்ட 2 கட்சிகளுக்கும் தெளிவானதொரு கொள்கை இருக்கிறது.



பதவிகளையோ, வேறு வகையான சலுகைகளையோ, எதிர்பார்க்கும் கட்சிகளை எம்மோடு நாம் இணைத்துக் கொள்ளவில்லை.

இதய சுத்தியுடன் மக்களுக்குச் சேவை செய்வதற்கு முன்வருபவர்களை மாத்திரமே நாம் எம்முடன் இணைத்துக்கொள்கிறோம்.

எனவே, சலுகைகளையோ, வேறு கோரிக்கைகளையோ முன்வைத்து தம்மிடம் எவரும் பேரம் பேசமுடியாது."– என்றார்.

# கடந்த 7 மாதங்களில் 197 யானைகள் சாவு!

## அவற்றின் தாக்குதல்களால் 73 பேர் பலி



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 197 யானைகள் உயிரிழந்துள்ளன என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விபத்துக்கள் மற்றும் யானை – மனித மோதல்களினால் அதிகளவான யானைகள் உயிரிழந்துள்ளன என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், இந்தக் காலப்பகுதியில் யானைகளின் தாக்குதல்களினால் 73 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.





# கணினி உதிரிப்பாகங்களில் கடத்தப்பட்ட 5 கிலோ ஐஸ்

கட்டுநாயக்கவில் கொள்கலன் ஒன்றில் கணினி உதிரிப்பாகங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விசேட அதிரடிப்படையினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

# திறந்த பல்கலைக்கழக சட்டத்துறையின் மாணவர்கள் குழு ஜனாதிபதியுடன் சந்திப்பு





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் பிரகாரம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, துறைமுக நகர், மத்திய வங்கி, நாடாளுமன்றம் உள்ளிட்ட கொழும்பை சூழவுள்ள கல்வி முக்கியத்துவம் வாய்ந்த விசேட இடங்களை பார்வையிடும் வாய்ப்பு பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

அதற்கமைய இலங்கை திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை மாணவர்கள் 280 பேர் நேற்று முன்தினம் களப்பயணத்தில் இணைந்து கொண்டமையுடன் அவர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு விஜயம் செய்த பின்னர், ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்குமாறு அவர்கள் கோரியுள்ளனர். ஜனாதிபதி தனது வேலைப் பழுவைப் பொருட்படுத்தாமல் பல்கலைக்கழக மாணவர்களை சந்தித்தமையுடன் அவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

அவர்களின் கல்விச் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை தொடர்பில் மாணவர்கள் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளித்தது, அவர்களைத் தெளிவுபடுத்தவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுடன் ஜனாதிபதி குழுப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்த சந்திப்பில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் பிம்பா திலகரத்ன, ஜனாதிபதி செயலக உதவிப் பணிப்பாளர் மேஜர் நதீக தங்கொல்ல ஆகியோரும் இணைந்து கொண்டனர்.




# இணையத்தில் பொருள் கொள்வனவு; பணம் செலுத்தாத இரண்டு பேர் கைது

இணையத்தில் பொருள்களைக் கொள்வனவு செய்து விற்பனையாளருக்குப் பணம் செலுத்த மறுத்த இருவரை வெலிக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 4 கைத்தொலைபேசிகள், 2 மடிக் கணினிகள் மற்றும் ஒரு ரவுட்டர் என்பனவும், இணைய விற்பனையாளர் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட தங்க நகைகள் மற்றும் 2 கைக்கடிகாரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இணைய விற்பனையாளரின் புகாரின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து வாரியபொல மற்றும் சுனந்தபுர பிரதேசங்களில் வசிக்கும் 20 மற்றும் 24 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படவுள்ள நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.08.2024




இன்று உற்சாகத்துடன் நீங்கள் செய்யும் எந்த ஒரு செயலும் உங்களுக்கு சாதகமாக அமையும். சில ஏமாற்றங்கள் காணப்படும். அவைகள் மூலம் தடை ஏற்பட அனுமதிக் காதீர்கள். உங்கள் செயல்களை தொடர்ந்து செய்யுங்கள்.

உங்கள பணியில் சில போராட்டங்கள் சந்திக்க நேரும். ஆனால் உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்றுவதன் மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். நிதிநிலையை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பலகீனமாகவும் சோர்வாகவும் இருப்பீர்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




இந்த நாளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அவர்களின் மூலம் சில இடையூறுகள் ஏறபடும்.

உங்கள் உறவில் அகந்தை மனப்பான்மை காணப்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை உங்கள் எதிர்பார்ப்பின் படி அமை யாது. செலவுகள் அதிகமாக இருக்கும். சேமிப்பை பராமரிக்க இயலாது.

தோள்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறை யான உடற்பயிற்சி உங்களை ஆரோக்கியமாக வைத் திருக்கும்.




உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகு முறையில் விட்டுகொடுத்து செல்லும் போக்கு காணப்படும்.

உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களுடன் ஒரு விருந்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று உறவில் அன்பு நிறைந்து காணப் படும். அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் இன்று உறவில் பிணைப்பு அதிகரிக்கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள்.




உங்கள் குடும்பப் பொறுப்புகள் அதிக மாக காணப்படும். எனவே நேர்மையான முறையில் அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

பணிகள் அதிகரித்து காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படும். முக்கியமான பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துனையுடன் தொடர்பு கொள்ளும்போது கவனம் தேவை. இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

உங்கள் நிதிநிலைமையை கவனமாகக் கையாள வேண்டும். திடீர் செலவுகள் காணப்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். என்றாலும் கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




கூடுதல் பொறுப்புகள் காரணம ாக பதட்டம் நிறைந்திருக்கும். பாது காப்பற்ற உணர்வு கானபப்டும். முக் கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

பணியிடத்தில் அமைதியான அணுகுமுறையை பராமரிக்க வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் பணிகளை சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உங்கள் உணர்வுகளை உங்களின் துணையிடம் வெளிப்படுத்துவது எளிதாக உணர்வீர்கள். எதிர்மறை எண்ணங்களை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி சுமாராகக் காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் காணப்படும். நேர்மறை எண்ணத்தை பராமரிக்க முயலுங்கள்.




நேர்மறை எண்ணங்களை வளர்த் துக் கொள்வது நல்லது. வெளியிடங களுக்கு சென்று வருவதன் மூலம் அமைதி கிடைக்கும்.

பணியில் வெற்றி பெற மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறைப்படி ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற் பட வாய்ப்புள்ளது. உறவில் நல்லிணக்கத்தை பரா மரிக்க விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்வது நல்லது.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை முறையாக செலவு செய்யும் நிலை காணப்படாது.

சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளுங்கள். அதிக நீரைப் பருகுங்கள்.




இன்று தன்னம்பிக்கையுடன் அமைதி யான மன நிலையில் இருப்பீர் கள். உங்களின் முக்கியமான செயல்களை செய்து திருப்தி உணர்வை அடைவீர்கள்.

பணியிடத்தில் அனைத்தும் சிறப் பாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல பிணைப்பு காணப்படும்.இருவருக்கும் இடையேயான புரிந்துணர்வை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




எளிதான மற்றும் திட்டமிட்ட அணுகுமுறை மூலம் இன்று நீங்கள் வளர்ச்சி அடையலாம். உறுதி மற்றும் தைரியம் உங்களை உச்சத்துக்கு அழைத் துச் செல்லும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியிடத்தில் நன்மையும் பாராட்டும் கிடைக்கும்.

நல்ல புரிந்துணர்வை பராமரிக்க நட்பான அணுகுமுறை தேவை. இது இருவருக்கும் இடையேயான உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பை கூட்ட இயலும்.

நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள். இன்றிய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்

# இன்றைய ராசி பலன்கள் - 08.08.2024




ஆன்மீக ஈடுபாடு பலன் தரும். பிறருடன் பழகி அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்ளலாம்.

நல்ல பலன்களைக் காண கடுமையாக உழைக்க வேண்டும். நீங்கள் சிறிது பணிகளை இன்று முடிப்பீர்கள். சில பணிகள் நிலுவையில் இருக்கும்.

உணர்ச்சிவசப்படுவதன் மூலம் துணையுடனான உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். ஆரோக்கியமான உறவுக்கு இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் ஏற்படும். சில கடன்களை அடைக்க நேரும்.

உடல் உழைப்பு காரணமாக தோள்களில் வலி ஏற்படும். தியானம் மூலம் அமைதி பெறலாம்.




இன்று நீங்கள் சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள். புதிய நபர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்படுவார்கள். உங்கள் நண்பர்களின் பட்டியல் விரிவடையும்.

உங்கள் பணியில் நற்பெயர் எடுப்பீர்கள். சக பணியாளர்களும் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நல்லுறவை மேம்படுத்த உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். இன்றைய் தினம் பங்கு வர்த்தகம் லாபம் தரும் மற்றும் சாதகமாக இருக்கும்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

அதிகரிக்கும் பணிகளை சமாளிக்க நேரும். இதனால் தேவையற்ற தவறுகள் ஏற்படும். பொறுமையுடன் பணிகளைக் கையாள்வது நல்லது.

உங்கள் துணையின் நடத்தை எரிச்சலை ஏற்படுத்தும். அமைதியாக இருந்து அறிவு பூர்வமாக பிரச்சினைகளை கையாள வேண்டும்.

இன்று நிதிநிலையில் கட்டுப்பாடு காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

செரிமானம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் நேரலாம். வெளியிடங்களில் உணவு உண்பதை தவிர்த்தல் நலம்.




இன்று வெற்றி பெறுவதற்கு விரைந்து முடிவெடுக்க வேண்டும். உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியில் உங்கள் முயற்சிக்கான நன்மதிப்பை பெறுவீர்கள். முக்கியமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இது இருவருக்கும் திருப்தியை அளிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. பணம் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்தைப் பராமரிப்பீர்கள்.

